ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1655/2 - 2010 මැයි 24 වැනි සඳුදා - 2010.05.24

*1655/2 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78.*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

*செயலாளர்,*
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.*

*கொழும்பு,*
*2010.04.21*

**கட்டளைச் சட்டம்**

*1. இக்கட்டளைச் சட்டம் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழக (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*2. காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும் 2008, ஓகத்து 18 ஆம் திகதிய 1563/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான 1990, சனவரி 5 ஆம் திகதிய 591/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் இலங்கை திறந்த பல்கலைக்கழக கட்டளைச் சட்டம் அக்கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பந்தியில் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*

(அ) *அதன் (3) ஆம் உட்பந்தியில் விடயம்* (iv) *ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப்பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் :-*

"(iv) *கணிதம் மற்றும் கணனி அறிவியல் ;*"; *அத்துடன்*

(ஆ) *அதன் (4) ஆம் உட்பந்தியில் விடயம்* (vi) *ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயத்தை இடுவதன் மூலம் :-*

"(vi) *புடவை மற்றும் ஆடைத் தொழில் நுட்பவியல் ;*".

*5-147*